மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 99/2015 நாள்– 07.09.2022

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– சுப்பிரமணியன் (பி.வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் பிரதிவாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 08.05.2015ம் தேதியிட்ட சாத்தூர் வட்டாட்சியரிடம் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி கொடுத்த புகார் மனு நகல் – பி.வா.சா.ஆ.1 (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையோடு குறியீடு செய்யபட்டது. ஆட்சேபணைக்கான காரணமாவது பி.வா.சா.ஆ.1 நகல் என்றும் அதில் கையொப்பம் எதுவும் இல்லை என்றும் அந்த ஆவணம் அனுப்பபட்டதற்கான ஆதரவு எதுவும் இல்லை என்பதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

2) 26.05.2015ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி ஏழாயிரம்பண்ணை சார்பு ஆய்வாளரிடம் ஆக்கிரமிப்பை அகற்ற வாதி மீது கொடுத்த புகார் மனு நகல் – பி.வா.சா.ஆ.2 (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையோடு குறியீடு செய்யபட்டது. ஆட்சேபணைக்கான காரணமாவது பி.வா.சா.ஆ.2 நகல் என்றும் அதில் கையொப்பம் புதிதாக உள்ளது

என்பதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

3) 02.06.2015 ம் தேதியிட்ட காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது – பி.வா.சா.ஆ.3

4) 22.05.2015 ம் தேதியிட்ட விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் ஆக்கிரமிப்பை அகற்ற கொடுத்த புகார் மனு நகல் – பி.வா.சா.ஆ.4 (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையோடு குறியீடு செய்யபட்டது. ஆட்சேபணைக்கான காரணமாவது பி.வா.சா.ஆ.1 நகல் என்றும், அடித்தல் திருத்தல் உள்ளது என்றும், அதில் கையொப்பம் எதுவும் இல்லை என்றும் அந்த ஆவணம் அனுப்பபட்டதற்கான ஆதரவு எதுவும் இல்லை என்பதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

5) 31.07.2015 ம் தேதியிட்ட சாத்தூர் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய குறிப்பாணை அசல் – பி.வா.சா.ஆ.5

(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)